உணர்த்தும் மொழி - 1

# பெரியதன் ஆவி பெரிது

"கடலால் சூழப்பட்ட இந்த உலகில் காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரியம், சித்தம், புத்தி, அகங்காரம், மயக்கம், வெகுளி என்ற குணங்களை வென்று, குற்றம் இல்லாமல் உன்னையே நீ முழுவதுமாக உணர்ந்து, உனக்குள்ளே இறைவன் இருக்கிறான் என்பதையும், அவன் திருவடியினையும் அறிந்தவர்களின் உயர்வுதான் மிகப் பெரியதாம். இதற்கு அரூபி, ஆன்மா, ஆவி என்று பொருள்.

அப்படி இறைவன் திருவடியினை அறிந்து உயர்ந்தவர்கள் ஆவி என்ற உயிரைப் போல் பெரியதாகும் என்பர். இங்கு ஆவி என்பது - தனக்குள்ளே இருக்கும் இறைவனை, பிறர் காண முடியாது என்பதே பொருளாகும். அதனால் அந்த இறைவனுக்கு மற்றொரு பொருள், அரூபி என்றும், அந்த இறைவனை (அரூபியை) தன் ஆன்மாவுக்குள் அடங்கி இருப்பதாகவும் மற்றொரு பொருளாகிறது. அப்படி தன் ஆன்மாவுக்குள் அடங்கி இறைவனை அரூபியாக கண்ட இறைவனின் அடியவர்களைப் பெரிதும் வணங்கி உய்வர். இந்த உயர்வு தான் மிகச் சிறந்தது என்பது இதன் கருத்தாகும். இதைத்தான் "பெரியதன் ஆவி பெரிது" என்பர். முடிந்தால் இதனை நாமும் முயற்சித்து பார்க்கலாம்."

உணர்த்தும் மொழி - 2

# பொருளைக் கொடுத்து இருளைக் கொள்ளார்

"விளக்கெரிவதற்குக் காரணமாகத் திகழ்வது எது? எண்ணெய், நெய், திரி, அகல் முதலியவையாகும். அவற்றை விலை கொடுத்து வாங்குவதன் இயல்பை நாம் சற்று ஆராய்ந்து பார்த்தால், அந்த விளக்கை ஏற்றியபின் அந்த விளக்கின் சுவாலையானது நன்றாக நின்று எரிய வேண்டும். அப்படி சரியாக அந்த விளக்கு எரியாமல் ஒளி மழுங்கி, திரி சரியாக எரியாது போனால், அதை விலை கொடுத்து வாங்கியதால் நமக்கு என்ன பயன்?

அதைப் போல தனக்குப் பலன் அளிக்கும் பொருளை ஒருவர் வாங்கிய பின் அது பயனளிக்காமல் போனால் அதனால் அவருக்கு என்ன பயன்? ஆகையால் வாங்குமுன் சோதித்து வாங்க வேண்டும், என்பதன் விளக்கமாகத் தான் பொருளைக் கொடுத்து இருளைக் கொள்ளார் என்ற பழமொழி விளக்குகிறது. இதனுள் உள்ள ஓர் ஆழ்ந்த அர்த்தம் என்னவென்றால், அழகானதென்று நீ எதை நினைத்தாலும் அது உனக்குப் பயனளிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். பயனளிக்காதது எதுவும் நிஜமான அழகாகாது எனக் கொள்வாயாக!

இது விலை கொடுத்து வாங்கிய பொருள் பயனற்றதற்கு ஒப்பாகும். இதையே "பொருளைக் கொடுத்து இருளைக் கொள்ளார்" என்று இம்மொழி விளக்குகிறது. இன்னும் எளிதில் புரிய வேண்டும் என்றால் உங்கள் வீட்டுப் பிள்ளைகளுக்கு வரன் பார்க்கும்பொழுது வாங்கும் பொருளுக்கே மேற்குறிப்பிட்டபடி இவ்வளவு விஷயம்

இருக்கிறது என்றால் வரனை எப்படி தேர்ந்தெடுத்து மணம் முடிக்க வேண்டும் என்பதை இம்மொழியை வைத்து யோசித்து முடிவு செய்யுங்கள் என்று உணர்த்தும் மொழியிதுவே.''

## உணர்த்தும் மொழி - 3

# அறிவுடையாரை அறிவுடையாரே அறிவர்

"பாம்பு ஊர்ந்து சென்றதை அந்தப் பாம்பினம் தான் அறிய முடியும். அதைப் போல அறிவிற் சிறந்தவரை அறிந்து கொள்வது அறிவிற் சிறந்தவர்க்கே தான் இயலும். மாறாக எளிய அறிவுடையவர்கள் அனுபவங்களை, நீ பெற்று எதையும் சாதிக்க இயலாது. நல் அறிவுடையவர்களின் அனுபவத்தை எவர் ஒருவர் அவரவர் துறைகள் சார்ந்து கீழ்ப்படிந்து கற்கத் தவறுகிறார்களோ, அவரால் எந்த சாதனைகளையும் அடையவே முடியாது. அப்படி அனுபவமே இல்லாத ஒருவர் சாதித்திருந்தால், அவரும் அறிவானவர் என நாம் அவரைப் பின்பற்றி உடன் இருந்து கற்க முயலுதல் வேண்டும். இதைக் கண்டறிய கோபம், அவசரம், எதிர்ப்பேச்சு, அலட்சியம் கூடாது. மாறாக பொறுமை, சகிப்புத்தன்மை, கிரகிப்பு, பயிற்சி, குறிக்கோள், விடாமுயற்சி ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே இந்தமொழியின் உள் அர்த்தமாகும்.

அறிவுடையாரை ஒருக்காலமும் மூர்க்கனும், முட்டாளும் அறிய முடியாது. அப்படி அறிந்தாலும் அவர் பெருமைகளையும் திறமைகளையும் பொறுத்துக் கேட்டு உணர்ந்து பின்பற்றி

ஒருக்காலமும் தானும் அறிவாளி ஆக முடியாது. அப்படி ஆகவேண்டும் என்றால் முட்டாள்தனத்தை விட்டுவிட்டு, அறிவுடையோரைப் பின்பற்றி வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் அவரும் அறிவுடையவராகி சாதிக்கலாம் என்பதையே "அறிவுடையாரை அறிவுடையாரே அறிவர்" என்று இந்தமொழி விளக்குகிறது.''

## உணர்த்தும் மொழி - 4

# அறிவற்றவனே தன் வாயால் கெடுவான்

"மனதால் கெட்டவன் தன் செய்கையாலும், தன் பேச்சாலும் என்றேனும் ஒருநாள் அவனே தான் கெட்டவன் என்று தன்னைத்தானே வெளிப்படுத்தி விடுவான். இதற்கியல்பாக நாம் சொல்லும் பழமொழிகள் இரண்டுள்ளன.

1. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவான்.
2. நுணலும் தன் வாயால் கெடும் என்று.

இதில் ஒரு சித்தாந்தம் ஒளிந்து கிடக்கிறது. அது ஒருவரின் முகத்தைப் போல அவரது குணத்தைக் காட்டும் நிலைக் கண்ணாடி போல் வேறு எதுவுமே இருக்க முடியாது.

மணல் படிந்த நீருக்குள் ஒளிந்து வாழும் தவளை, தன் குரலாலேயே தன்னை உண்ணும் ஜீவனிடத்திலே அகப்பட்டுக்

கொள்ளும். அதைப்போலவே தானாக வேடுவனிடத்திலே மாட்டிக் கொள்ளும். விலங்குகள் கூட, தாமிருக்கும் இடத்தைத் தம் சப்தத்தினாலேயே காட்டி வேடுவனிடத்தில் சிக்கிக் கொள்ளும்.

இதைப்போல, மனிதா! உன்னிடமுள்ள தவறுகளையும், உள்ளத்தில் எழும் தவறான சிந்தனைகளையும், வார்த்தைகளையும் நீ திருத்திக் கொண்டால், மேற்குறிப்பிட்டபடி துன்பத்தில் அகப்படாமல் தப்பித்துக் கொள்ளலாம். இதற்கு மங்கிக் கிடக்கும் உன் அறிவை நல்ல அறிவான ஆசானிடம் பட்டை தீட்டிக் கொள்ள வேண்டும், என்பதே இம்மொழியின் உள்ளர்த்தமாகும்.”

உணர்த்தும் மொழி - 5

## புறம் பேசுபவர்கள் திருந்தமாட்டார்கள்

“உன்னிடத்தில் பழகும் உறவுகள், நண்பர்கள் போன்றவர்கள் யாராயினும் உன்னைப் புகழ்ந்து பேசினால், அவர் (உங்களிடம்) மட்டுமில்லாமல், உங்களை அறிந்தவர்களிடம் மட்டும் புகழ்ந்து பேசுபவர்கள் என்றால், வெளியிலும் புகழ்ந்து பேசுகிறாரா... இல்லையா? என்பதை நீ தெரிந்து உணராது போனால், அவரே உனக்கு மறைந்த எதிரி என்பதை நீ உணர வேண்டும். இதனால் உன் உயர்வுகளில் பல செயல்கள் தடையாகும் என்பது உறுதி. அப்படி உன்னை நேரில் பார்க்கும் போது ஒருவர் புகழ்ந்தால், அந்தப் புகழால் உனக்கு பல நட்டங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு.

அதுமட்டுமில்லாமல், அப்படி புறம்போய் (வெளியில்) உன்னை இகழ்ந்து பேசுகின்ற ஒருவர் எக்காலத்திலும் திருந்தமாட்டார், திருத்தவும் முடியாது என்பதை உணர்ந்து - உடன் இருப்போரிடமும், பழகுபவரிடமும் புகழுக்கு அடிபணியாதே என்பதை அறிந்து கொள். இதையே "புறம் பேசுபவர்கள் திருந்த மாட்டார்கள்" என்ற இம்மொழி விளக்குகிறது. புறம் பேசுபவர்களை நீ துறந்தால் உன் நிஜமான புகழ் எது என்பது உனக்குப் புரியும். புறம்போய் பேசுபவர்கள் மெய்யானவரா, பொய்யானவரா என்றும் உன்னால் உணர முடியும் புரிகிறதா, என்று உணர்த்தும் மொழியிது.''

உணர்த்தும் மொழி - 6

## தீயவருக்குச் சொல்வதைவிடத் தீயது எதுவுமில்லை

"நல்ல ஞான நூல்கள், அறிவுத்திறன்மிக்க அறிஞர்களின் நூல்கள், விஞ்ஞானத்துவத்தின் பெருமைகளை உணர்த்தும் நல்ல நூல்கள், மெய்ஞானத்தை விளக்கும் அற்புதமான நூல்கள் போன்ற பல நல்ல நூல்களைக் கற்றவர்கள், அதன் உள்ளிருக்கும் நல்ல கருத்துகளை உணர்ந்து நல்ல ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து, அதனை பின்பற்றி, பெரும் சாதனைகள் படைத்த ஒருவர், இதையெல்லாம் சிறிதும் கல்லாதவரிடம் இந்தக் கருத்துகளை விரிவாகச் சொல்லி, புரிய வைத்தால், அந்தக் கல்லாதவர் பஞ்சைப் பிய்த்து காற்றில் விடுவதைப் போல இருப்பர் என்பதை, உணர்ந்து கற்றவர் அறியாது கல்லாதவரிடம் அறிவுறுத்தினால் அதைவிடத் தீயது வேறெதுவும் இல்லை என்று அறுதியிட்டுக் கூற முடியும்.

இங்கு தீயவர் என்பது முட்டாளேயாகும். ஆகையால் முட்டாளுக்கு அறிவு சொல்வதைவிட முட்டாள்தனம் எதுவும் இருக்கமுடியாது என்று இம்மொழி உணர்த்துகிறது. இப்படிபட்ட முட்டாள்கள் பல பேருக்கு நான் சொல்லி பட்ட அனுபவத்தை வைத்து தான் இந்த மொழியில் உணர்த்துகின்றேன்.''

உணர்த்தும் மொழி - 7

## அறிவுச் செல்வமே சிறந்த செல்வம்!

“ஐயா! நீ எப்படிப்பட்ட செல்வச் செழிப்போடு வாழ்ந்தாலும் அந்தச் செல்வமான பொன், பொருள், மனை, வீடு, மாடமாளிகைகள், ஏன் அரண்மனை கூட கட்டியிருக்கலாம். தங்கத்தாலும் வைரத்தாலும் கூட, ஆடை அணிகலன்களை உபயோகப்படுத்தியிருக்கலாம். இதைவிட இன்னும் ஆடம்பரங்களாகக்கூட இருந்திருக்கலாம். ஆனால், இதில் ஒன்றை நன்றாகப் புரிந்து கொள்ளவும். பாருங்கள் பெரிய செல்வந்தன், நடுத்தரச் செல்வமுடையவன், ஏழை, பரம ஏழை என்ற நிலையில் மனித வாழ்வு இருப்பது அனைவரும் அறிந்ததே. இந்த வேறுபாட்டிற்கென்ன காரணம் என்று செல்வச் செருக்காய் வாழ்பவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். என்னவெனில் எந்த செல்வங்களும், உயர்ந்திருந்தாலும் அவை ஒருக்காலமும் நிலைத்து நில்லாமல் மாறி மாறி வரும், போகும் இயல்புடையது. இவ்வளவும் ஏன்? நீ எவ்வளவு தான் செல்வங்கள் பெற்றாலும் நீ இறந்து போனால் அந்தச் செல்வங்கள் கண்டிப்பாக இன்னொருத்தரிடம்

போய்விடும். அது யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் உன் அறிவுச் செல்வத்தால் நீ எதைப் பெற்றிருந்தாலும், வாழ்ந்திருந்தாலும் அவை நீ இறந்தாலும் காலமுள்ளமட்டும் அச்செல்வம் இருந்து கொண்டேயிருக்கும் என்பது உறுதி. உதாரணம் உன் அறிவால் நீ பெற்ற பட்டம், படிப்பு இவை அனைத்தும் அழியாது. அவற்றால் நீ செய்த நன்மைகளும் அழியாது.

இதுவே அறிவுச் செல்வத்தின் மகிமையாகும். ஆக, பொருட்செல்வத்தால் எப்பயனும் இல்லை என்பதை உணர்ந்து பாருங்கள். அறிவுச் செல்வத்தின் மகிமை புரியும். சிலர் பல வழிகளில் பணம், பொன், பொருள், பதவிகள் அனைத்தும் தன் அறிவால் வந்தது என்று நினைப்பதுண்டு அது.

சிட்டுக்குருவி, பருந்தென எண்ணி பறப்பதற்கு ஒப்பாகும். நீ வாழும் பொழுதும் சரி, இறந்த பின்பும் சரி, உன் உடன் வருவது அறிவுச் செல்வமே. நிலைத்து நிற்பதும் அந்த அறிவுச் செல்வமே. ஆகையால் அறிவைப் போல் சிறந்தது உலகில் வேறு எதுவும் இல்லை." என்று அறிவுள்ளோருக்கே இம்மொழி விளக்குகிறது என்று புரிந்து கொள் நண்பா!

உணர்த்தும் மொழி - 8

# கை விளக்கை நம்பு, பொய் விளக்கை நம்பாதே!

"மின்சாரம் இல்லாத காலத்தில் கூட எத்தனை எத்தனையோ மகா அறிஞர்கள் வாழ்ந்து வந்தனர் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கை விளக்கைக் கொண்டு அறிஞர்,

ஞானியர், விஞ்ஞானியர் என்று சாதித்தவர்கள் இன்று வரையிலும் நம்மில் புகழோடு வாழ்ந்து வருகின்றனர். இனி காலம் உள்ள மட்டும் அவர்கள் வாழ்வர் என்பதும் உறுதி.

இங்கு கைவிளக்கு என்பது, அறிவு விளக்கு. அதன் ஒளியே செயல் என்பதை நாம் ஆழ்ந்து உணர வேண்டும். இன்று நவீன காலத்தில் நவீனமயமாக்கப்பட்ட சாதனங்கள் எவ்வளவு இருக்கின்றன! இதனைப் பயன்படுத்தி எளிதில் நம் செயல் களைச் செய்து விடலாம் என்று கருதி, பலபேர் அந்த சாதனங்களை உபயோகப்படுத்துகின்றனர். உதாரணமாக, கணினி, கைபேசி, தானியங்கி என எவ்வளவோ சாதனங்கள் உள்ளன. ஒருவர் கணக்குப் போட வேண்டும் என்றாலும் இந்தச் சாதனங்களைப் பயன்படுத்துகின்றார்கள்.

இதனால் நினைவாற்றல், சிந்தனை, செயல்வேகங்களும் கண்டிப்பாகக் குறைவது மட்டுமில்லாமல், இச்சாதனங்களைப் பயன்படுத்தும் போது மின்சாரம் இல்லை என்றாலோ, பேட்டரி இல்லை என்றாலோ இவர்கள் செயல்படுவது கடினம். மின்சாரம் வரும் வரை காத்திருக்க வேண்டும். ஒரு இளைஞன் தன் வீட்டில் படிக்கும்போது கணினியின் துணைக் கொண்டு கணக்கு போட்டால் பரீட்சையின் போது அவன் என்ன செய்வான்? நன்றாக சிந்தித்துப் பாருங்கள்! நமக்கு இரு கண்களும் நன்றாக இருக்கின்றன. அவை அனைத்தையும் பார்க்கிறது. சூரிய வெளிச்சமோ, சந்திர வெளிச்சமோ இல்லையென்றால் கண் நன்றாகத் தெரிந்தும் என்ன பயன்? உடனே, மின்சார விளக்கு இருக்கிறதென்று நினைக்கலாம். பெரும் புயல்வீசி மின்சாரம் சில நாள் இல்லாது போனால் உன் நிலைமை என்ன?

அப்பொழுது வீட்டில் இருக்கும் மண்விளக்கும், மற்ற விளக்கும் தான் பயன்படும். இது எப்பொழுதும் நமக்கு உதவக்கூடியது என்பதைக் கருத்தில் வையுங்கள். இங்கு சிந்திக்க ஒருசில துளிகள். ஒரு குருடர், காட்டின் வழி பயணம் செல்கிறார். அவர் தனது கையில் ஒரு விளக்கை ஏந்திச் செல்கிறார். அதைப் பார்ப்பவர்கள் சிரிக்கிறார்கள். அதில் ஒருவர் அந்தக் குருடரைப் பார்த்து, "ஏனப்பா! நீயோ கண் தெரியாதவன், உன் கையில் எதற்கு இந்த விளக்கு?" என்று கேட்க, அந்தக் குருடர், "ஐயா, இந்த விளக்கு எனக்கு இல்லை. மின்சாரம் இல்லாத இருண்ட நேரத்தில் என் எதிரில் வருபவர்கள், நான் விளக்கை கையில் ஏந்திச் சென்றால் அவர்கள் என்னைக் கண்டு ஒதுங்கி வழிவிடுவார்கள் இல்லையா? என்பதற்காக" என்றார், அந்தக் குருடர்.

இப்பொழுது, கண் தெரியாமலும் சாதித்தவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள் என்பதை சிந்தித்தால் மெய்விளக்கின் அருமை புரியும். ஆக, உன் அறிவென்னும் மெய்விளக்கை நம்பி நீ எதைச் செய்தாலும் உன்னை அது நற்கரை சேர்க்கும். பொய்யான, நவீன சாதனங்களான பொய் விளக்கை நம்பிச் செயல்பட்டால் என்றைக்கிருந்தாலும் ஒருநாள் நீ வேதனைப்பட்டே தீர வேண்டும். இதனால் பொய் விளக்கு வேண்டாம் என்று நான் கூறவில்லை. அதை பயன்படுத்து. ஆனால் மெய்விளக்கு தான் என்றும் உனக்கு உறுதுணை என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதே இம்மொழி உணர்த்தும் தத்துவம்."

## உணர்த்தும் மொழி - 9

# தெளியானைத் தேறல் அரிது

“இது முக்கியமாக நாம் பின்பற்ற வேண்டிய உணர்த்தல் மொழியாகும். இதை யோசித்தால் பல நன்மைகளுக்கு இது காரணமாகும். உறவுகள், நட்புகள், நம்முடன் பணிபுரிவோர், நாம் பழகுவோர் என யாராக இருந்தாலும் இதைக் கவனியுங்கள்.

உள்ளத்தில் தெளிவில்லாதவர்களையும், எப்பொழுதும் எல்லாவற்றிற்கும் கோபப்படுபவர்களையும், அறிவு இல்லாத செயல்களைச் சிறிதும் சிந்திக்காமல் செயல்படுத்துபவர் களையும், எச்செயலையும் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று சோம்பேறித்தனமாக உள்ளவர்களையும், நம்முடன் இருப்பவர்களில் அதிகமாகத் தங்களைப் பற்றியே புகழ்ந்தும், குனிந்து கூழைக்கும்பிடு போட்டுப் பழகுபவர்களையும் விட்டு விலகி நிற்பது தான் நமக்கும், நம் உயர்வுக்கும் நல்லது என்று சான்றோர் கூறுவர்.

இதனை உணர்ந்து பழகுங்கள். வாழ்க்கையில் நீங்கள் வெல்வதற்கு இதுவே சிறந்த வழியாகும். இதில் மேற்குறிப்பிட்டுள்ள வர்களையும், அவர்களுடைய நடத்தையையும் நீங்கள் அறியாமல் பழகினால், உங்களுக்கு தெளிவான புத்தி பிறக்காது. எதையும் வெற்றி கொள்வதும் கடினம். இதைத் தெரிந்து தெளிந்து பழகிட முயற்சி செய். இல்லை என்றால் நீ அனைத்து விஷயத்திலும் தேறிடுவாய் என்பது அரிது, இதையே “தெளியானைத் தேறல் அரிது” என்று இந்த மொழி விளக்குகிறது.”

### உணர்த்தும் மொழி - 10

# அறிவற்றவர் சொல்லை அலட்சியப்படுத்தி விடுங்கள்!

"அறிவில் பெரியோர்களே! நீங்களும் அறிந்திடுங்கள்! ஒரு நாய் நம்மைக் கடித்தால், அதை திரும்ப நாம் கடிக்க மாட்டோம். மாடானது நம்மை முட்டினால் திரும்பி நாம் அதை முட்டுவதில்லை. அதைப்போல அறிவுடையவரை அறிவில்லாத ஒருவர் அவரைப் பழிக்கும் சொற்களைக் கூறி, ஊர் முழுக்க கடிந்து பேசுவாராயின், அந்தச் சொற்களை மதித்து அறிவுள்ளவர் மனதில் கொண்டு வேதனைப்படுவரோ? மேலும்,

அறிவற்றவர் சொன்ன சொல்லை நீ ஏற்றுக் கொண்டால், உனக்கு அவர் பிச்சை இட்டார் என்பதும் நீ அதனை ஏற்றுக் கொள்வதற்கும் அர்த்தமாகும். வேண்டாமென்று மறுத்து மௌனமாய் நீ திரும்பிச் சென்றால், கொடுப்பவருக்கே அவை சொந்தம் என்பதை நீ யோசித்துப் பார். எப்படி அறிவற்றவன் உன்னை அலட்சியப்படுத்தினாலும் அதை நீ ஏற்காது போனால் அது ஒருக்காலமும் உன்னை பற்றி வேதனைப்படுத்தாது. மாறாக, அதை நீ ஏற்றுக் கொண்டால் அது பனை மரத்தின் மீது ஏறி உச்சியில் நின்றுகொண்டு பஞ்சு மூட்டையைப் பிரித்து கொட்டுவது போலாகும். மேலும்,

மேற்குறிப்பிட்டபடி அறிவற்றவனைப் போல் நீயும் திரும்பி ஏதேனும் சொல்கிறாய் என்றால், உன்னைக் கடித்த நாயை நீ திரும்பக் கடிப்பது போலாகும் என்பதை உணர்ந்து, "அறிவற்றவர் சொல்லை நீங்கள் விட்டு விடுங்கள்" என்கிறது இந்த உணர்தல்மொழி."

உணர்த்தும் மொழி - 11

## எலி விளக்காய் தீமையைத் தேடாதே!

"தாழ்வு மனப்பான்மை கொண்டவராகத் தாங்கள் இருந்து, ஒருவர் கலகத்தால் தங்கள் மீது பழிபோடுகிறாரோ என்றெண்ணி, தாங்களாகவே அப்போலியான பழியைப் பற்றி, பலபேரிடமும் சொல்லி வந்தால், "விளக்கெலி" தனக்குத் தானே தீமையான அழிவைத் தேடிக் கொள்வது போலாகும்.

அதாவது, எலியானது எரிந்து கொண்டிருக்கும் விளக்கின் திரியை இழுத்துச் சென்று தன் இடத்தில் வைத்தால் தான் இருக்கும் இடத்தையும் காட்டும், அதே திரியின் நெருப்பால் தீப்பற்றி தானே அழியும். அதைப்போல தாழ்வு மனப்பான்மை கொண்டவர்கள் இதுபோல் ஆகிவிடக்கூடாது என்பதை உணரவும்.

தாழ்வு மனப்பான்மை என்பது, உண்மையில்லாத விஷயங்களை இருப்பதாகக் கருதி தூக்கத்தில் கூட இறந்து விடுவோமோ! என்று பயப்படுவர். இதனால் தாங்களே தங்கள் பலவீனத்தை வெளிப்படுத்தி கவலை ஆகிய கூட்டுக்குள் சிக்கித் துன்பப்படுவார்கள் - விளக்கின் திரியை இழுத்துச் சென்ற எலியைப் போல என்பதை உணர்ந்தால் எலிவிளக்காய்த் தானே தீமையைத் தேடிக் கொள்ள வாய்ப்பில்லை என்று உணர்த்தும் மொழியிது."

உணர்த்தும் மொழி - 12

# தீயவரின் நட்பு பாம்பு போல் பாழ்படுத்திவிடும்

“தீயவருடன் நட்பு கொண்டு, அவரது பேச்சைக் கேட்டு, அதன்படி நடப்பவரின் நிலையானது எப்படி இருக்கும் என்றால், ஒரு பாம்பானது பாம்பு பிடிப்பவரிடம் மாட்டிக் கொண்டு வேதனைப்படுவது போன்றதாகும்.

அதாவது பாம்பு பிடிப்பவர் அதனைப் பிடிக்கும் சமயத்தில், அவர் ஒரு பெரிய கலனின் (பாட்டிலின்) வாயைக் காட்டி, அந்தப் பாம்பின் முகத்திற்கு முன் கொண்டு செல்ல, அந்தப் பாம்பானது “ஆஹா... நாம் தப்பித்துக் கொள்ள ஒரு நல்ல இடம் கிடைத்து விட்டது!” என்றெண்ணி அந்தக் கலனுள்ளே (பாட்டிலின் உள்ளே) சென்று மேலும் அடைபட்டு மாட்டிக் கொள்வது போல, தீயவருடன் நட்பு கொள்ளும் ஒரு மனிதரின் நிலையும் அந்தப் பாம்பின் நிலை போல வேதனைக்குரியதாக மாறிவிடும். பாட்டிலில் சிக்கிய பாம்பைப் போல நீ ஜெயிலினுள் மாட்டிக் கொள்ளாதே! எனவே தீயவரின் நட்பை அறவே தவிர்க்க வேண்டும் என்பதே இம்மொழியின் கருத்தாகும்.”

### உணர்த்தும் மொழி - 13

# இனநலம் கொண்டாலும் மனநலம் ஆகாது

"மிகவும் பெருகிய காட்டாற்று வெள்ளம் கடலில் பாய்ந்து கலந்தாலும், கடலின் உப்புத்தன்மை நீங்கவே நீங்காது. மாறாக, ஆற்று நீரும் உப்பாகிப் போகும். அதுபோலவே தகுதியில்லாத கீழ்புத்தியும், மனமும் கொண்டவர்கள் நல்லவரிடத்தில் நெடுங்காலம் சேர்ந்திருந்தாலும், அவர் தம் மனத்தில் தூய்மையைப் பெறுவதில்லை. என்னதான் கடல் நீர், ஆற்று நீர் இரண்டும் ஒரே இனம் (நீர் இனம்) ஆனாலும், கடல் நீரை விட்டு உப்புத்தன்மை நீங்காதது போல, கீழ்புத்தி உள்ளவர்கள் எப்போதும் மனத்தூய்மை இல்லாமல் இருப்பார்கள். ஆற்றுநீர் எவ்வளவு தான் சுத்தமானதாக இருந்தாலும் அதனால் கடல்நீரின் தன்மையை மாற்றிவிட முடியாது.

எனவே கீழ்புத்தியுள்ளவன் உன் இனமாகவே இருந்தாலும், "நான் நல்லவன், சுத்தமானவன், என்னால் அவனை மாற்றிவிட முடியும்" என்றெல்லாம் நினைப்பது வீணான முயற்சியாகும். தகுதியில்லாதவர்களிடமும், மனத்தூய்மை இல்லாதவர்களிடமும் பழகுவதையும், நட்பு பாராட்டுவதையும் அறவே தவிர்த்தல் வேண்டும். இல்லையேல் சுத்தமான ஆற்றுநீர் கடலில் கலந்து வீணாவதைப் போல் ஆகிவிடும். இதுவே "இனநலம் கொண்டாலும் மனநலம் ஆகாது" என்பதன் முழுவிளக்கமாகும். இக் கலிகாலத்தில் ஒரு உண்மை தெரியுமா? இனத்தாருக்கு இனத்தாரே பகையாவார் என்று மறைமுகமாக உணர்த்தும் மொழியிது ஆகும்."

### உணர்த்தும் மொழி - 14

# பசும்பால் இறவாமல் கொள்ளுமோ நட்பு

"சுமாரான அறிவில் சிறந்தவர் ஒருவரை மற்றொரு நல் அறிவில் சிறந்தவர் நட்பாய்க் கொண்டு அறிவில் அவருக்கு நல்வழி காட்டி உயர்ந்தவராக்கி மகிழ்வார். அப்படி உயர்ந்த அந்த சுமாரான நண்பன் தன் மனத்தில் குற்றமுள்ளவனாய் தானே உயர்ந்து விட்டது போல வளர்த்து விட்ட நல் அறிவில் சிறந்த அந்த நண்பனிடம் ஆணவத்தோடு கூறுவதைப் போல, இக்காலத்தில் பல நட்பு நம்மிடையே இப்படித்தான் உள்ளன. ஆனால் உயர்த்தி விட்டானே மற்றொரு நல் அறிவில் சிறந்த நண்பன்! அவன் ஒருகாலமும் அந்தக் குற்றமுள்ள நண்பனை எண்ணிக் கோபப்படமாட்டான், வருந்தவும் மாட்டான். ஏன் தெரியுமா?

ஒரு பசு, கன்றை ஈன்று பால் சுரக்கும் போது, அந்தத் தாய்ப்பசுவானது, கன்றுக்கு பால் விடாமல் செய்து பாலைக் கறப்பவர் இந்த உலகில் யாரும் இல்லை. கன்றுக்குப் பால் சுரந்த கொடுத்த பின்னரே தான் தாய் பசு பாலைக் கறக்கும் (கறக்கவும் முடியும்).

இதனை உணர்ந்து பார்த்தால் ஒரு விஷயம் நன்கு புலப்படும். உயர்ந்தவராக்கிய அந்த நல்அறிவுள்ள நண்பன் தாய்ப்பசுவைப் போன்றவன். உயர்ந்துவிட்ட குற்றமுள்ள நண்பன், பசு ஈன்ற கன்றுபோல அந்த தாய்ப் பசுவிடம் கொஞ்சம் மட்டும் பால் குடிப்பதைப் போலாகும் குற்றமுள்ளவன் கொஞ்சம் ஞானத்தை மட்டும் அறிவுள்ள நண்பனிடமிருந்து பெற்றுக் கொண்டு தானே எல்லாம் அறிந்தது போல ஆணவத்துடன் நடக்கிறான். அவன்

தன்மையோடு நடந்து கொண்டால் இன்னும் நிறைய ஞானத்தையும் அந்த அறிவுள்ள நண்பனிடமிருந்து பெற்று, உய்ய முடியும். ஆனால் தனது ஆணவத்தால் குற்றமான நண்பன் அறிவுள்ள நண்பனிடத்தில் சிறிது பாலை மட்டும் கறந்தது போலாகும். இன்னும் பல ஞானப்பால் அந்தப் பசுவினிடத்தில் (அறிவுள்ள நண்பனிடத்தில்) இருப்பதை உணர மாட்டான். உயர்ந்துவிட்ட அந்த துரோகி அறிவாளி நண்பன். இக்காலத்தில் இப்படிப்பட்டவர்கள் புல்லை போட்டு பாலை மட்டும் கறக்க மாட்டார்கள். போலி சொல்லைப் போட்டு பணத்தையும் கறப்பார்கள் என்று இந்த உணர்த்தல் மொழி உணர்த்துகிறது புரிகிறதா?"

### உணர்த்தும் மொழி - 15

## அறிஞரே ஆனாலும் துன்பத்தை உரைக்கத் தேடு!

"நீ எப்படிப்பட்ட வல்லவனாய் இருந்தாலும், நல்லவனாய் இருந்தாலும், உனக்கு நோய் வந்து விட்டால் அந்த நோய் தீர மருத்துவரிடத்தில் உனது நோயை மறைத்துச் சொல்ல முடியாது. என்ன நோய்? எப்படி வந்தது, என்ன செய்கிறது என்பதை நீ உண்மையாய்ச் சொல்லியே தீர வேண்டும். இதைக் கருத்தில் கொண்டால் நல்ல மனமும், நல்ல திறமையும், இரக்க குணமும் கொண்ட ஓர் அறிஞர், துன்பத்தைத் தீர்க்கும் சக்தி பெற்றவர் என நீ ஒருவரைக் கருதினால், அவரிடத்தில் தாம் அடைந்துள்ள துன்பத்தை மறைக்காமல் அப்படியே சொல்லவேண்டும்.

இதை யோசித்தால் எவரானாலும் துன்பத்தை நீக்கும் நற்குணம் படைத்தவரைத் தேடித்தானே ஆக வேண்டும்?

அப்பொழுதுதான் உனக்கு நோய் தீருவது போல் துன்பமும் தீரும் என உணர்ந்து அந்த சக்தி பெற்றவரை தேட முயற்சி செய்! போலி சக்தி பெற்றவரிடம் மாட்டி கொள்ளாதே! அறிஞராகவே இருந்தாலும் அவருக்கும் துன்பம் தீர்க்கும் ஒரு சக்தி பெற்றவர் தேவை என உணர்த்தும் மொழி இது. அவரை தேடி இணங்கி துன்பங்களை தீர்த்துக்கொள்."

உணர்த்தும் மொழி - 16

## தக்க நேரத்தில் உதவாமை உடன் இருப்போர் இல்

"நல்ல நட்போ, உறவோ பலநாள் தன்னுடன் பழகி உறவாடி, தன் உறுதுணையைப் போலவே ஒருவர் உடனிருந்தாலும், உனக்கு ஆபத்து வரும் காலத்தில் அவர் உன்னை விட்டு விட்டு மெல்ல நழுவி விடுவார். உனக்கு வந்த அந்த ஆபத்தினால் நீ இறந்து விட்டால் அந்த நபரும், அதே உறவும், நட்பும் நீத்தார் காரிய கடன் வெகுவிமரிசையாக ஊர்மெச்சச் செய்து அழுது புலம்புவார்கள். அது எப்படி இருக்கிறது தெரியுமா?

பெற்றோர்கள் முடிந்து விட்ட திருவிழாவிற்கு தன் பிள்ளைகளை தோள் மீது சுமந்து வந்து திருவிழாவைக் காட்ட அழைத்து வருவதற்கே ஒப்பாகும். இன்றைய உறவும் நட்பும் இப்படித்தான் இருக்கும் என்பதை உணர்ந்து செயல்படுங்கள்.

ஆபத்தில் தக்க நேரத்தில் உதவுபவர்களை ஒருபோதும் விட்டு விடாதீர்கள், மறவாதீர்கள்! உணர்ந்து பாருங்கள். மொழியின்

உணர்த்தல் புரியும், உண்மையும் புரியும்! அதாவது, நரியும், நாயும் உருவத்தால் ஒன்றாய் இருந்தாலும் தரமும், தன்மையும் வெவ்வேறு என்று புரிந்துகொள். நரியை நாயென உடன் வைத்திருக்கிறாயா! என்று கவனித்து பழகிடு நண்பா!''

உணர்த்தும் மொழி - 17

## கோள் - கலகம் கேட்டு நட்பு கொள்ளாதே!

"தலைசிறந்த நல்ல மனிதர்கள் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள், நல்ல உறவுகள், நல்ல நட்பு போன்றவர்கள் மீது யாரோ ஒருவர் கலகம் (கோள்) சொன்னால் அதனை அந்த தலைசிறந்த மனிதர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் கலகம் சொல்பவர்கள் அவர்களுடன் உறவாடி, நட்பு கொண்டு, அவர்களால் ஏதும் பிரயோசனமில்லை என்று எண்ணி அவர்கள் மீது தேவையற்ற பழி போட்டு கோள் சொல்லி தேன் கூட்டில் கல்லெறிவது போல கலகக் கல் எறிந்து நல்ல உறவையும், நட்பையும் பாழ்படுத்தி, பிரிக்க எண்ணுவர். அதனால் அந்த நல்ல மனிதர்கள் கோள், கலகத்தை ஏற்க மாட்டார்கள். கோள் சொல்பவரையும் நம்பமாட்டார்கள்.

அதற்கு மாறாக கீழ்புத்தியுடையவர்கள் தன் உறவு, நட்பு மீது யாராவது கலகம் (கோள்) சொன்னால், அதை அப்படியே ஆராயாமல் ஏற்று, மெய் என்று நம்பி, நல்ல உறவையும் நட்பையும் இழந்து விடுவார்கள்.

ஆகையால், கோள் சொல்லும் (கலகம் செய்யும்) கீழ்புத்தி உடையவர்களின் நட்பு பின்னால் உங்களுக்கு துன்பத்தையே தரும் என்பதை உணர்ந்து பழகுங்கள். அவர்களிடம் நட்பு கொள்ளாதீர்கள். ஏனென்றால், தேனீக்களால் அழகாய் சேர்ந்த தேன்கூட்டைக் கலைத்துவிட்டு அவர்கள் மெய்யான சுவையுள்ள தேனை கவர்ந்து செல்வார்கள் என்பதை உணர்த்தும் மொழி இது! அதனால் கோள்புத்தி செய்வோரை எந்த கோலால் அடித்தாலும் திருந்த மாட்டார்கள். புரிந்துகொள் நண்பா!''

## உணர்த்தும் மொழி - 18

# "ஏ... வஞ்சகனே! அகத்தின் அழகை முகம் காட்டிவிடும். ஜாக்கிரதை!

"ஈரம் உடைய கடற்கரை மணலைக் கொண்டு சிற்பம் செய்யும் அறிஞர்கள் (திறமையானவர்கள்) வெள்ளம் வரும் என்பதை முன்னமே அறிந்திடுவார்கள். அதைப் போல நம் மீதும், பொதுவாகவும் உள்ளத்திலும், எண்ணத்திலும் வஞ்சம் கொண்ட ஒருவன், தான் வஞ்சம் உள்ளவன் என்பது வெளியில் தெரியாமல் புத்திசாலியென மறைத்து மகிழ்வுடையவனாய் வஞ்சகச் செயலில் ஈடுபட முற்படும்போது அவன் முகமே அவன் வஞ்சகச் செயலில் ஈடுபடுபவன் என்பதை நிலைக் கண்ணாடி போல காட்டிவிடும் என்பதை மேற்குறிப்பிட்ட அறிஞர்கள் போல் அறிவுடையோர் அறிந்திருப்பதால் அவர்கள் மிக எளிதாகக் வஞ்சகரை கண்டுபிடித்து விடுவார்கள்.